

திண்டுக்கல் அருகே ஒட்டன்சத்திரம் விருப்பாச்சியில் சுதந்திர போராட்ட வீரர் கோபால் நாயக்கருக்கு மணிமண்டபம் கட்டி நாயுடு நாயக்கர் சமுதாயத்தினருக்கு பெருமை சேர்த்தவர் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பேசியதோடு கோபால் நாயக்கரின் 223வது நினைவு நாள் விழாவில் கலந்து கொள்வதாக தமிழ்நாடு நாயுடுநாயக்கர் உறவின்முறை பாதுகாப்பு இயக்க நிர்வாகிகளிடம் உறுதியளித்தார்.



திருப்புவனம் மேற்கு கிழக்கு ஒன்றிய நகர தி.மு.க. சார்பில் திருப்புவனம் டி.ஆர்.திருமண மஹாலில் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன் தலைமையில் வசந்தி சேங்கைமாறன். எம்.ஏ கடம்பசாமி. பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார். சிறப்புரையாற்றினார்கள் இந்நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் ஜெயமூர்த்தி. யூனியன் துணை சேர்மன் மூர்த்தி. பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ. மாவட்ட பிரதிநிதிகள் பிச்சைமணி.ராமலிங்கம். ஈஸ்வரன்.சுப்பையா. அக்கினி ராஜ். ஒன்றிய கழக நிர்வாகிகள். சுப்பிரமணியன். இளங்கோவன். மகேந்திரன். தினகரன். சக்திமுருகன். ஜெயசித்ரா நடராஜன். அன்னமுத்து இளங்கோவன். ராமு. மீனாட்சி சுந்தரம். மாவட்ட விவசாய நிர்வாகிகள் டி.ஆர்.சேகர். பூவந்தி மணிகண்டன். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் தேவதாஸ்.அறிவுகரசு. நகர இளைஞரணி அமைப்பாளர் கண்ணன். ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர்கள் காளிதாஸ்.பாண்டிய கிருஷ்ணன் தேளி கோபால்.. மணிமுத்து. மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### ம.கிரகாம்பெல் தலைமையில்

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள்!

நெல்லை, ஆக.31-

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க.பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகின்ற (3.9.2024-செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு பணகுடி ஷான் தாமஸ் மஹால் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெறுகிறது என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

3.9.2024 அன்று நடைபெற உள்ள பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளை கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,

மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர்புற,ஊரக உள்ளாட்சி,தலைவர்கள் உறுப்பினர்கள், கழகத்தின் ஆணிவேராம் கழகத் தோழர்கள், கழகப் பொது உறுப்பினர்கள், உள்ளிட்ட அனைவரும் திரளாக பங்கேற்று கருத்துக்களை வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1.கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் தீர்மானங்கள்.

2. 17.9.2024 அன்று சென்னையில் நடைபெற உள்ள முப்பெரும் விழா.

3 கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர்இரா.ஆவுடையப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




நெல்லை மாநகராட்சி மைய அலுவலக இராஜாஜி மண்டபத்தில் மாமன்ற கூட்டம் மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன் தலைமையில் ஆணையாளர் என்.ஓ.சுகபுத்ரா, துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மண்டல தலைவர்கள் பிரான்சிஸ்(பாளை)கதிஜா இக்லாம் பாசிலா (மேலப்பாளையம்)ரேவதி (துச்சை)மகேஸ்வரி(நெல்லை) உள்பட நிலைக் குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி உதவி ஆணையாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மு.தென்னவன் தலைமையில்-சிவகங்கை மாவட்டம்

# காரைக்குடி மாநகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பங்கேற்பு! மேயர் சே.முத்துத்துரை வரவேற்புரை !

காரைக்குடி, ஆக.31-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் காரைக்குடி மாநகரச் செயலாளர் நா.குண சேகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் முன்னாள் அமைச்சரும், கழக தலைமை செயற்குழு உறுப்பினருமான மு. தென்னவன் தலைமையில், மேயர் சே.முத்துத்துரை வரவேற்புரையில், முன்னாள் எம்.எல்.ஏ. சுப. துரைராஜ், துணைமேயர் நா. குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் (3.9.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணியளவில் அபூர்வா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் மற்றும் அமைச்சரும் கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், கழக மகளிர் அணிச் செயலாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் வருகை பற்றியும் கழக வளர்ச்சிப் பணி மற்றும் புதிய வாக்காளர்கள் சேர்த்தல் பற்றியும் கலந்தாலோசனை செய்யப்படுகிறது.

இதில் வட்டக்கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், கழக இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி மற்றும் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

மாநகர அவைத் தலைவர் த. சன்சுப்பையா நன்றி கூறுகிறார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


